# தொல்காப்பியக் காஞ்சித் திணையும் மகட்பாற் காஞ்சியும்

## *Kaanchi Thinai* of *Tholkaappiyam* and *Makatpaar Kaanchi*

மு. அரவிந் / M. Aravind[1]

**Abstract**

Tamil grammar has always had a separate place in linguistic studies. *Tholkaappiyam* is the starting point of such Tamil grammar. *Porulathikaaram* of *Tholkaappiyam* is a main tool to access Tamil literature. It also briefly defines *Agam* and *Puram*. *Tholkaappiyam* is a testament to Tamil knowledge tradition, and many studies still need to be done on it. Research on the *Puraththinai* grammar of *Tholkaappiyam* continues to emerge. Furthermore, this article is based on its continuity. *Puraththinai* is the integrity of the various elements of life except for love. *Kaanchi Thinai* is considered the main factor in *Puraththinai's* grammatical study. This article explains *Kaanchi Thinai* states nature of impermanence. From the time of Gautama Buddha, the impermanence in nature remains in the Indian philosophical tradition and has been carried over until *Saiva* in the Dravidian practice. The content of *Thurais* in *Kaanchi Thinai* is examined in this study. *Makatpaar Kaanchi* is one of the *Thurai*s in *Kaanchi Thinai*, which is the focus of this article. Its purpose is to approach *the Makatpaar Kaanchi Thurai* based on impermanence. *Tholkaappiyam*, *Kaanchi Thinai* found in *Tholkaappiyam*, and *Makatpaar Kaanchi*, one of the Thurais in *Kaanchi Thinai*, set the boundary for this study. This study explains the content of *Makatpaar Kaanchi* in *Puraththinai*'s grammatical analysis.

Date of submission: 2022-07-30
Date of acceptance: 2022-09-16
Date of Publication: 2022-12-28
Corresponding author's Name:
M. Aravind
Email:
aravind.yuvan001gmail.com

**Key Words:** Purapporul Grammar, Kaanchi Thinai, Impermanence, War, Marriage

### அறிமுகமும் ஆய்வுப் பின்புலமும்

தொல்காப்பியப் புறத்திணை இலக்கணம் பற்றிய ஆய்வுகள் தொடர்ந்து வெளிவந்து கொண்டிருக்கின்றன. இக்கட்டுரையும் அதன் தொடர்ச்சியே. புறத்திணை இலக்கண ஆய்வுப் பரப்பில் காஞ்சித் திணை முதன்மையானது. காதல் தவிர்த்து வாழ்வியல் நெறிகளை வகுத்தளிப்பது புறத்திணை. புறத்திணையான காஞ்சித் திணைச் சுட்டுவது நிலையாமையை. காஞ்சித் திணையின் துறைகள் எத்தகைய பொருளை விளக்குகின்றன என்பது ஆய்வுக்குரியது. மகட்பாற் காஞ்சியானது காஞ்சித் திணையின் துறைகளுள் ஒன்று. நிலையாமையை அடிப்படையாகக் கொண்டு மகட்பாற் காஞ்சித் துறையை அணுகுவது இக்கட்டுரையின் நோக்கம். தொல்காப்பியம், அதில் இடம்பெறும் காஞ்சித்

[1] The Author is a Ph.D. Scholar in the Department of Tamil, Presidency College (Autonomous), Chennai, Tamil Nadu, India. aravind.yuvan001gmail.com

திணை மற்றும் காஞ்சித் திணையின் துறையான மகட்பாற் காஞ்சி ஆகியன இந்த ஆய்வுக்கு எல்லைகளாக அமைகின்றன. புறத்திணை இலக்கண ஆய்வுப் பரப்பில் மகட்பாற் காஞ்சியின் பொருண்மையை இவ்வாய்வு விளக்க முற்படுகிறது.

**தொல்காப்பியம்**

தமிழைப் பிறமொழி இலக்கிய மரபுகளிலிருந்து பிரித்துக்காட்டி, அதன் சிறப்பம்சங்களைத் தொல்காப்பியம் எடுத்துக் கூறுகின்றது. தொல்காப்பியப் பொருளதிகாரத்தின் உள்ளடக்கத்தினை அறிந்து கொள்ளும் பொழுதுதான் தொல்காப்பியம் தமிழின் இலக்கியப் பொருளை, அவை ஆக்கப்படும் முறையை எவ்வாறு கூறுகின்றது என்பது தெரியவரும்.

தொல்காப்பிய அகத்திணையியல், புறத்திணையியல்களை வைத்துக்கொண்டே சங்கப் பாடல்கள் அணுகப்படுகின்றன. சங்க இலக்கியம் பற்றிய பொதுப் பார்வையைத் தொல்காப்பியமும் அதற்கான உரைகளும் தீர்மானித்துள்ளன. தொல்காப்பியம் இல்லாது சங்க இலக்கியப் பாடல்களை மட்டும் நாம் பெற்றிருப்போமேயானால் அகம், புறம் பற்றிய இன்றைய பிரிப்புக்கு அழுத்தம் வந்திருக்காது.

> இந்நிலையில், “சங்கப் பாடல்களை விளங்கிக்கொள்வதற்குத் தொல்காப்பியத்தையே ஆதாரச் சுருதியாகக் கொள்வதனால், தொல்காப்பியத்தினூடே மேற்கிளம்பும் கவிதைக் கொள்கைகள் (Theories of Poetry) கவிதைப் பண்பாடு (Poetic Culture) யாவை என்பதைத் திட்டவட்டமாக அறிந்து கொள்வது அவசியமாகின்றது. தமிழின் உரைப் பாரம்பரியம், தொல்காப்பியத்தையே சங்க இலக்கிய விளக்கத்துக்கான திறவுகோலாகக் கொண்டு வந்துள்ளது. எனவே சங்க இலக்கியக் கவிதைப் பண்பாட்டையும், தொல்காப்பியக் கவிதைப் பண்பாட்டையும் இணைத்து நோக்குவது அவசியமாகின்றது” என்று கா. சிவத்தம்பி கூறும் விளக்கத்தை உற்று நோக்க வேண்டியுள்ளது.
>
> (கார்த்திகேசு சிவத்தம்பி, 2012, p. 32)

“பொருள் அதிகாரம் என்பது தமிழின் இலக்கியப் பொருள் பற்றிப் பேசுவது என்றே பொருள்கொள்ளல் வேண்டும். உண்மையில் பொருள் அதிகாரத்தில் (அக்கால நிலையில்) தமிழிலக்கியத்தின் பொருளாக அமைந்தமை பற்றியும் அந்த இலக்கியங்கள் எவ்வாறு உருவாக்கப்படுகின்றன என்பது பற்றியும் தமிழின் எடுத்துரைப்பு மரபு பற்றியும் பேசப்படுகின்றது” (கார்த்திகேசு சிவத்தம்பி, 2012, p. 11) என்கிறார் கா. சிவத்தம்பி.

“தொல்காப்பியப் பொருளதிகாரம் பண்டைத் தமிழர்களின் பழக்கவழக்கங்களையும் நூல் முறைமைகளையும் பிற சிறப்புகளையும் ஆராய்ந்து அறிவதற்கு ஒரு சிறந்த கருவி நூலாக இலங்குகின்றது” (சுப்பு ரெட்டியார், 2010, p. 11) என்று விளக்குகிறார் ந. சுப்பு ரெட்டியார். உண்மையில் இலக்கியத்தை வரலாற்றுரீதியாக அணுகும் ஆய்வுகளுக்கும் இலக்கியம் பற்றிய பார்வைகளுக்கும் பேருதவியாக இருப்பது தொல்காப்பியப் பொருளதிகாரமாகும். பொருளதிகாரத்தையே ஓர் இலக்கியக் கோட்பாடாகக் கொள்ளும் ஆய்வாளர்களும் உள்ளனர்.

> “திணை என்ற சொல்லைத்தான் தொல்காப்பியத்தில் காண்கிறோம்; கோட்பாடு என்று அதனை நாம் அடையாளம் காட்டுவது இன்றைய அணுகுமுறையாகும். இங்கே இரண்டு செய்திகள் முக்கியமானவை.
>
> 1. திணை பற்றிய செய்திகள் இலக்கியவியல் சார்ந்தவை அக்கோட்பாடு ஓர் இலக்கியக் கோட்பாடு.
>
> 2. இச்செய்திகளை முதன் முதலில் தொல்காப்பியம் என்ற நூலில் உள்ள பொருளதிகாரத்தில் காண்கிறோம்”
>
> (சீனிச்சாமி, 2016, p. 22)

தொல்காப்பியப் பொருளதிகாரம் என்பது ஓர் இலக்கியக் கோட்பாடு என்பதை விளக்கமாக அறிமுகப்படுத்தியுள்ள கெ. அய்யப்ப பணிக்கர் கூறியுள்ள சில கருத்துக்களை மனங்கொள்வது மிகவும் தேவை. “இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த தென்திராவிட மக்களின் அழகியல் உணர்வுகளின் பதிவேடான கோட்பாட்டு நூலே (நூலின் பகுதி என்றும் கூறலாம்) 659 நூற்பாக்களைக் கொண்ட பொருளதிகாரம்” (அய்யப்ப பணிக்கர், 2012, p. 121)

தொல்காப்பியர் பொருளதிகாரத்தில் அகப்பொருள் இலக்கணத்தை நான்கு இயல்களிலும், புறப்பொருள் இலக்கணத்தை ஓரியலிலும் கூறுகின்றார். அகப்பொருளை அகத்திணையியல், களவியல், கற்பியல், பொருளியல் என அமைத்தது போன்று புறப்பொருளை புறத்திணையியல், அரசியல், சமயவியல், அன்றாட வாழ்வியல், நூலியல் என்று அமைக்கவில்லை. புற வாழ்வின் பல்வேறு இயல்புகள் தொல்காப்பியரால் தொகுத்தளிக்கப்படவில்லை. போர், போர் முறைகள், அரசரைப் போற்றுதல் என்ற அளவிலேயே புறத்திணையியல் அமைகின்றது.

**காஞ்சித் திணை**

தொல்காப்பியர் பொருளதிகாரத்தில் புறத்திணையியலுள் காஞ்சித் திணையை ஆறாவது திணையாக வைத்துக் கூறுகின்றார். இக்காஞ்சித் திணையுள் மகட்பாற் காஞ்சி என்னும் துறையானது ஒன்பதாவது துறையாக அமைந்துள்ளது. மகட்பாற் காஞ்சியின் இலக்கணத்தை ஆராயும்போது காஞ்சித் திணையின் பொருண்மையினையும் அறிந்துகொள்வது அவசியமாகிறது.

“போர்/மூர்க்கம் ஆகியவற்றின் விளைவுகள் குறித்த பல்வேறு நிலைகள் பற்றி, (விரிவான விளக்கங்களாகவும்), அமையக்கூடிய இலக்கியங்களே காஞ்சி இலக்கியம். சாவு குறித்த எழுத்து, சாவினால் ஏற்படும் வாழ்வு நிலையாமை குறித்தது” (சீனிச்சாமி, 2016, p. 44) தொல்காப்பியர் காஞ்சித் திணையின் இலக்கணத்தைப் பின்வருமாறு விளக்குகிறார்.

> “காஞ்சி தானே பெருந்திணைப் புறனே
> பாங்கருங் சிறப்பிற் பன்னெறி யானும்
> நில்லா உலகம் புல்லிய நெறித்தே” (தொல்.பொருள்.இளம். 76)

காஞ்சி என்னும் புறத்திணை, பெருந்திணை என்னும் அகத்திணைக்குப் புறனாக அமைந்தது ஆகும். பல வழியிலும் நிலையில்லாத உலகத்தைப் பலவகையான சிறப்பினால் பொருந்தியது என்று இதற்குப் பொருள் கொள்ளலாம்.

தொல்காப்பியர் குறிப்பிடும் நிலையாமையை இளம்பூரணர் இளமை நிலையாமை, செல்வ நிலையாமை, யாக்கை நிலையாமை என மூன்றாகப் பகுத்து நாலடியார் பாடல்களை எடுத்துக்காட்டுக் கூறி விளக்குகிறார். (இளம்பூரணர், 1969, p. 127) மேற்கூறிய காஞ்சித் திணை நூற்பாவை நச்சினார்க்கினியர் இரண்டாகப் பிரித்துப் பொருள் கூறுகிறார். மேலும் இளம்பூரணர் இளமை, செல்வம், யாக்கை என்று மூன்றாகக் கூறும் நிலையாமையை உயிர், யாக்கை, செல்வம், இளமை என்று நான்காகக் கூறுகிறார். (நச்சினார்க்கினியர், 2007, pp. 262-264)

“காஞ்சித்திணையாவது, தனக்கு ஒப்பில்லாத சிறப்பென்னுஞ் செம்பொருளைப் பெறுதல் காரணமாக யாக்கை, இளமை, செல்வம் என்பவற்றால் நிலைபேறில்லாத இவ்வுலகியலைப் பற்றிக்கொண்டு அதனால் உளவாம் பலவகைத் துன்பங்களையும் பொறுத்து நிற்றலாகிய ஒழுகலாறாம். நில்லாதவற்றால் நிலையுடையதனை அடையும் முயற்சியே காஞ்சித்திணை” (வெள்ளைவாரணன், 2017, p. 271) என்று க. வெள்ளைவாரணன் காஞ்சித் திணையை விளக்குகிறார்.

**திணை வைப்பு முறை**

காஞ்சித் திணையின் நிலையாமை என்பதை அதன் திணை வைப்பு முறையை நோக்கும்போது மேலும் உய்த்துணர முடிகிறது. புறத்திணையியலில் காஞ்சித் திணையை வாகைத் திணைக்கு அடுத்து ஆறாவது திணையாக வைத்துள்ளார் தொல்காப்பியர். நச்சினார்க்கினியர் இதனை “வாகையோடு மயங்கிய காஞ்சி” (நச்சினார்க்கினியர், 2007, p. 267) என்று கூறுகிறார்.

“தன்னாட்டின் மேற் படையெடுத்துவரும் வஞ்சிவேந்தனது படையினை எதிர்சென்று தடுத்து நிறுத்துதலாகிய இப்போர்ச் செயல், பல்லாற்றானும் நில்லா வுலகியலைப் புல்லிநிற்றலாகிய காஞ்சித்திணையுள் அடங்குவதாகுதலின் ஆசிரியர் தொல்காப்பியனார் எதிரூன்றலாகிய இதனைத் தனித்திணையாக வகுத்துரைத்திலர்” (வெள்ளைவாரணன், 1983, p. 116) என வஞ்சித் திணைக்கு அடுத்து காஞ்சித் திணை அமையாத தன்மையினை விளக்குகிறார் க. வெள்ளைவாரணன். இச்சூழல்

புறப்பொருள் வெண்பாமாலை காலத்தில் மாறுதல் பெறுவதைக் காண முடிகிறது. அந்நூல் வஞ்சிப் படலத்திற்கு அடுத்து காஞ்சிப் படலத்தைக் கூறுவது நோக்கத்தக்கது.

"உயிர், நிலையாமையை உணராத போது அது தோல்வியைச் சந்தித்ததாக அமையும். அது எப்பொழுது நிலையுடைய ஒரு பொருளைப் பற்றுகிறதோ அப்பொழுதே வெற்றி பெற்றதாகிறது. இதனால் வாகைக்குப் பிறகு காஞ்சி இடம்பெற்றுள்ளது" (சிவநேசன், 2007, p. 43) என காஞ்சித் திணையின் வைப்பு முறையை விளக்குகிறார் பா. சிவநேசன்.

> "வாழ்வின் துறைதோறும் பெறும் வெற்றிக்கூறுகளை வாகைத்திணை என வகுத்து உரைத்த தொல்காப்பியர் தொடர்ந்து, நிலையாமைக் கூறுகளைத் தொகுத்துக்கூறப் புகுதல் சிந்தித்தற்குரியது. நிலையாமையினை விளக்கும் நச்சினார்க்கினியர் 'கணந்தோறும் கெடுவனவும் கற்பந்தோறும் கெடுவனவும் ஆம் என்றற்கு ஆறு' என்றார் என்பர். வெற்றிச் செருக்கில் மனிதனின் வாழ்வு முற்றுப் பெற்றது என மயங்காமை கருதியும், வாகை நிலைபெற வேண்டுமேல், நிலையாமை நிலைகளை உணர்தல் வேண்டும் என எண்ணியும் தத்துவநோக்கில் காஞ்சித் திணையினை அமைத்த திறம் போற்றற்பாலது" என விரிவாக விளக்குகிறார் சோ.ந. கந்தசாமி".
>
> (கந்தசாமி, 2016, p.14)

"வெட்சி சிறு போர்த் திணையாக அமைய, வஞ்சியும், உழிஞையும், தும்பையும் பெரும்போர் பற்றிய திணைகளாக வாகை வெற்றி மேம்பாடுகளைப் பேச, காஞ்சித்திணை இழவுத்திணையாக அமைகிறது" (பாலசுப்பிரமணியன், 2018, p. 54) என கு.வெ. பாலசுப்ரமணியன் ஒட்டுமொத்த புறத்திணையியலின் திணை வைப்பு முறையையும் விவரிக்கின்றார்.

**காஞ்சித் துறைகள்**

துறைகள் என்பன ஒரு பெரிய நிகழ்வின் உட்கூறுகள். தொல்காப்பியர் காஞ்சித் திணைக்கானத் துறைகளை மொத்தம் இருபதாகத் தொகுத்துக் கூறுகிறார். காஞ்சித் துறைகளை தொல்காப்பியர் விளக்கும் இடம் ஆய்வுக்குரியதாக உள்ளது. முதலில் பத்துத் துறைகளைக் கூறி 'ஈரைந்து ஆகும்' என்று கூறியதுடன் மீண்டும் பத்துத்

துறைகளைக் கூறி ‘துறை இரண்டுடைத்தே’ என்கிறார். பின்வரும் நூற்பா இதனை விளக்கும்.

மாற்றருங் கூற்றஞ் சாற்றிய பெருமைங்
கழிந்தோ ரொழிதோர்க்குக் காட்டிய முதுமையும் .. .. ..
(தொல்.பொருள்.இளம். 77:1-2)

இதனைச் சூத்திரம் பல்காமல் இருப்பதற்காக ஒரே நூற்பாவில் இரண்டையும் அடக்கிக் கூறினார் என்கிறார் நச்சினார்க்கினியர். மேலும் முதல் பத்துத் துறைகளை ஆண்பால்துறை என்றும் பிற்கூறிய பத்தும் பெண்பால்துறை என்றும் அவர் பகுத்துரைக்கிறார். (நச்சினார்க்கினியர், 2007, pp. 273-274)

“காஞ்சித்திணையின் முதல் பத்துத் துறைகள் போரியல் இழவு குறித்தன. பின் பத்துத் துறைகள் உலகியல் இறப்புக் குறித்தன.” (பாலசுப்பிரமணியன், 2018, p. 71) என்று விளக்கம் தருகிறார் கு.வெ. பாலசுப்பிரமணியன். இரண்டாவதாக இடம்பெறும் பத்துத் துறைகளும் பிற்காலச் சேர்க்கைகள் என்று கூறுவாரும் உளர்.

ஆனால் முதலில் கூறிய பத்துத் துறைகள் என்பன தொல்காப்பியர் காலத்திற்கு முன்பு வழக்கில் இருந்தவை என்றும் பின்னர் கூறிய பத்துத் துறைகள் அவர் காலத்தில் வழக்கில் இருந்தவை என்றும் இரண்டையும் தொகுத்துக் கூறியுள்ளார் எனக் கொள்வது பொருத்தமாக இருக்கும்.

**மகட்பாற் காஞ்சி**

மகட்பாற் காஞ்சியின் இலக்கணத்தைக் காஞ்சித் திணையின் முதல் பத்துத் துறைகளுள் ஒன்பதாவது துறையாக வைத்து வரையறுக்கிறார் தொல்காப்பியர். தம்மைப் பகைத்துப் படையெடுத்துச் செருக்குடன் வந்த வேந்தனுக்கு, முதுகுடிப் பெருமக்கள் தம் மகளை மணம் செய்து கொடுக்க மறுப்பது மகட்பாற் காஞ்சி என இந்நூற்பாவிற்குப் பொருள் கொள்ளலாம்.

நிகர்த்துமேல் வந்த வேந்தனொடு முதுகுடி
மகட்பாடு அஞ்சிய மகட்பா லானும் (தொல்.பொருள்.இளம். 77:14-15)

**இளம்பூரணர்**

“ஒத்து மாறுபட்டுத் தன் மேல் வந்த வேந்தனொடு தன் தொல்குலத்து மகட்கொடை அஞ்சிய மகட்பாற்காஞ்சி” என்று இளம்பூரணர் இந்நூற்பாவிற்குப் பொருளுரைக்கிறார். மேலும்,

> நுதிவேல் கொண்டு நுதல்வியர் துடையாக்
> கடிய கூறும் வேந்தே .. .. ..          (புறம். 349:1-2)

என்ற புறநானூற்றுப் பாடலையும் மகட்பாற் காஞ்சிக்கு உதாரணமாகக் கூறுகிறார். (இளம்பூரணர், 1969, pp. 131-132)

**நச்சினார்க்கினியர்**

மகட்பாற் காஞ்சிக்கு நச்சினார்க்கினியர் கொடுக்கும் விளக்கம் விரிவானதாக உள்ளது. அவர், “பெண்கோளொழுக்கத்தினொத்து மறுத்தல் பற்றிப் பகைவனாய் வலிந்துகோடற்கு எடுத்துவந்த, அரசனொடு முதுகுடித் தலைவராகிய வாணிகரும் வேளாளருந் தத்தம் மகளிரைப் படுத்தற்கு அஞ்சிய மகட்பாற்காஞ்சியானும்” (நச்சினார்க்கினியர், 2007, p. 272) என்னும் இடத்தில், இளம்பூரணர் தன் விளக்கத்தில் தொல் குலத்து என்று மட்டும் குறிப்பிட்ட நிலையில், நச்சினார்க்கினியர் முதுகுடித் தலைவர் என்று குறிப்பிடுகிறார். மேலும் முதுகுடித் தலைவர் என்போர் வாணிகர், வேளாளர் என்று அதற்கு விளக்கமும் தருகிறார்.

> “வேத்தியலாவது உயிர்போற்றாது வாழ்தலின், அவரது நிலையின்மை நோக்கி, அவரோடொத்து மகளிரைப் படுத்தற் கஞ்சி மறுப்பாராதலின் ‘அஞ்சிய’வென்றும், ‘மேல்வந்த’ வென்றுங் கூறினார். அம்முதுகுடிமகள் தாம் பொருது படக் கருதலின் உயிரது நிலையாமை உணர்ந்த காஞ்சியாயிற்று. பாலென்றதனான் முதுகுடிகளேயன்றி ‘அனைநிலைவகை’ யெனப்பட்டார்கண்ணும் இத்துறை நிகழ்தல் கொள்க” என்ற பகுதியில் முதுகுடித் தலைவர்கள் ஏன் மகட்கொடை மறுத்தனர் என்ற காரணத்தை நச்சினார்க்கினியர் விளக்குகிறார்.
>
> (நச்சினார்க்கினியர், 2007, p. 272)

அதன்படி அரசர்கள் உயிரை ஒரு பொருட்டாக எண்ணாமல் போர் செய்யும் காரணத்தினால் அவர்களது நிலையாமை எண்ணி மகட்கொடை மறுத்தனர் என்பது அவரது கூற்று. மேலும் மகட்கொடை மறுத்தல் என்பது முதுகுடித் தலைவர்களுக்கு

மட்டுமே உரியதன்றி, ‘அனைநிலைவகை’ என்று கூறி, வாகைத் திணையுள் குறிக்கப்பெறும் பார்ப்பனர், அரசர், வணிகர், வேளாளர், அறிவர், தவம் செய்வோர், பொருநர் போன்ற பிறர்க்கும் இத்துறை உரியது என்று கூறுகிறார்.

இளம்பூரணர் கூறியதைப் போன்று புறம். 349 ஆம் பாடலை உதாரணமாகக் கூறி,

களிறணைப்பக் கலங்கின காஅ
தேரோடத் துகள்கெழுமின தெருவு (புறம். 349:1-2)

என்ற புறநானூற்றுப் பாடலையும் எடுத்துக்காட்டுக் கூறுகிறார். மேலும் அப்பாடலின்கீழ், “இதனுள் ‘நிரலல் லோர்க்குத் தரலோ வில்லென’ என்றலின், அரசர்க்கு மகட்கொடைக் குரியரல்லாத ‘அனைநிலைவகை’ யோர்பாற்பட்டது” (நச்சினார்க்கினியர், 2007, p. 273) என்று முன்னர் கூறிய ‘அனை நிலை வகை’ என்பதற்கு உதாரணமாக இப்பாடலைக் கூறுகிறார்.

**பொருண்மை**

மகட்கொடை வேண்டி நின்ற அரசர்களுக்கு மகட்கொடைத் தராமல் முதுகுடித் தலைவர்கள் எதிர்த்து நிற்பது என்று மகட்பாற் காஞ்சிக்குப் பொருள் காண்கிறோம். ஆனால் இதுவரைக் காஞ்சித் திணை குறித்துக் கண்ட அதன் திணை வைப்புமுறை, பொருண்மை, அதன் துறைகள் ஆகியன அனைத்தும் நிலையாமையை உணர்த்தும் பொருட்டு, நிலையாமைப் பொருளினதாக அமைத்துள்ளார் தொல்காப்பியர். அவ்வாறு நோக்கும்போது மகட்பாற் காஞ்சியானது போர் பற்றிய செய்திகளை விளக்குகிறதா அல்லது நிலையாமை பற்றி விளக்குகிறதா என்ற வினா இயல்பாக எழுகிறது.

“இருபது துறைகளில் வஞ்சினக் காஞ்சி, மகட்பாற் காஞ்சி ஆகிய இரு துறைகளைத் தவிர ஏனைய பதினெட்டும் இறப்புக் குறித்தனவே” (பாலசுப்பிரமணியன், 2018, p. 54) என கு.வெ. பாலசுப்பிரமணியன் மகட்பாற் காஞ்சியைப் போர்ச் செய்திகளைக் கூறும் துறை எனத் துணிந்து கூறுகிறார்.

“குடித்தொன்மையில் ஒவ்வாநிலையில் ஒத்தானாகக் கருதி மகள் கொள்ளப் படையொடு வந்த மன்னனொடு தொல்குடி மகளைப்படுத்தலஞ்சி அதை விலக்க அவள் தன்னையர் வந்தவனொடு தம்முயிரைப் பொருட்படுத்தாது பொரும் மகட்பாற்காஞ்சியும்” (வெள்ளைவாரணன், 1983, p. 252) என்று ச. சோமசுந்தர பாரதியார் மகட்பாற் காஞ்சியின் போர்ச்சூழலை விளக்குகிறார்.

“திருமூலர் உயிரின் தன்மையாகிய உணர்வு நிலையாமையைக் குறிப்பிட்டுள்ளார். வஞ்சினக்காஞ்சி, மகட்பாற்காஞ்சி, தலைப்பெயல் நிலை என்னும் மூன்று துறைகளும் இதனைக் குறிப்பால் உணர்த்துவனவாம்” (சிவநேசன், 2007, p. 51) என்ற பா. சிவநேசனின் கருத்தைப் பார்க்கும்போது அவர் மகட்பாற் காஞ்சியை நிலையாமைப் பொருளாக எடுத்துரைக்கிறார்.

போர்க்களத்தில் உயிருக்கு அஞ்சாது போரிடுவதால் அவர்களின் வாழ்க்கை நிலை எண்ணி, அவர்கள் விரும்பிக் கேட்ட தத்தம் மகள்களை முதுகுடித் தலைவர்கள் தர மறுத்தனர். என்ற நச்சினார்க்கினியர் கருத்தைப் பார்க்கும்போது அவர் போரின் காரணமாக ஏற்படும் நிலையாமையை விளக்குகிறார் என்பது தெளிவாகிறது. (நச்சினார்க்கினியர், 2007, p. 272)

காஞ்சித் திணையின் முதல் பத்துத் துறைகள் போரியல் இறப்புக் குறித்தன என்றும் இரண்டாம் பத்துத் துறைகள் உலகியல் இறப்புக் குறித்தன என்றும் கூறுகிறார் கு.வெ. பாலசுப்பிரமணியன். (பாலசுப்பிரமணியன், 2018, p. 55) அவரது கருத்தைக் காணும்போது மகட்பாற் காஞ்சியானது முதல் பத்துத் துறைகளுள் இடம் பெற்றுள்ளது. அதன்படி மகட்பாற் காஞ்சியானது போரின் காரணமாக ஏற்படும் இறப்பைப் பேசுகிறது.

இதுவரை கண்டதில் நச்சினார்க்கினியர், இளம்பூரணர், கு.வெ. பாலசுப்பிரமணியன், ச. சோமசுந்தர பாரதியார் ஆகியோர் கருத்துக்களை அடியொற்றிப் பார்க்கும்போது மகட்பாற் காஞ்சியானது போர்ச் செய்திகளைக் கூறி அதனூடே நிலையாமையை விளக்குகிறது என்றும், அந்த நிலையாமைப் பொருளின் காரணமாகக் காஞ்சித் திணையுள் அமைந்துள்ளது என்றும், அதிலும் போர் நிலையாமையைக்

கூறுவதன் காரணமாக முதல் பத்துத் துறைகளுள் உள்ளது என்றும் மகட்பாற் காஞ்சியின் பொருண்மையை உய்த்துணரலாம்.

**முடிவுரை**

தமிழர் அறிவு மரபிற்குச் சான்றாக விளங்கும் தொல்காப்பியத்தில் மேற்கொள்ள வேண்டிய ஆய்வுகள் இன்னும் ஏராளம் உள்ளன. இக்கட்டுரை அதில் மகட்பாற் காஞ்சியை மட்டும் எடுத்தியம்பியுள்ளது. மகட்பாற் காஞ்சியின் அமைவாக உள்ள பொருளதிகாரமும் காஞ்சித் திணையும் கட்டுரையில் தனித்தனியே விளக்கப்பட்டுள்ளன. நிலையாமையைப் பேசும் காஞ்சித் திணைக் குறித்து விரிவாக ஆராயப்பெற்றுள்ளது. ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட மகட்பாற் காஞ்சித் துறையானது போர்ச் செய்திகளைக் கூறி அதனூடே நிலையாமையை விளக்குகிறது என்று அதன் பொருண்மை நிறுவப்பட்டுள்ளது. தொல்காப்பிய மகட்பாற் காஞ்சி என்பது சிறு துறையாக இருந்தாலும் அது தன்னகத்தே கொண்டிருக்கும் ஆய்வுப் பரப்பு நெடியது. இத்துறை தமிழியல் ஆய்வுச் சூழலில் வெவ்வேறு பரிணாமங்களில் ஆய்வு நிகழ்த்த இடமளிக்கின்றது.

## References


Ayyappa Paniker, K. (2012). *India Ilakkiya Kotpaadugal (Soozhal - Poruththam).* (N. Manogaran, Trans.) Chennai: Maatru Veliyeettagam.

Balasubramanian, K.V. (2018). *Sanga Ilakkiyaththil Purapporul.* Chidambaram: Meiyappan Pathippagam.

Ilampooranar. (1969). *Tholkaappiyam - Porulathikaaram.* Chennai: The South India Saiva Siddhanta Works Publishing Society.

Kandaswamy, S.N. (2016). *Thamizhilakkana Selvam.* Chidambaram: Meiyappan Pathippagam.

Karthigesu Sivathamby. (2012). *Tholkaappiyamum Kavithaiyum.* Chennai: New Century Book House.

Nachchinaarkkiniyar. (2007). *Tholkaappiyam - Porulathikaaram* (Vol. 1). (Ganesaiyar, Ed.) Chennai: International Institute of Tamil Studies.

Seenisamy, Durai. (2016). *Thinai Kotpaadu.* Chennai: New Century Book House.

Sivanesan, P. (2007). *Tholkaappiyarin Ilakkiya Kolgaikal.* Chennai: Seethai Pathippagam.

Subbu Reddiar, N. (2010). *Tholkaappiyam Kaattum Vaazhkkai.* Chennai: Palaniappa Brothers.

Vellaivaranan, K. (1983). *Tholkaappiyam: Puraththinaiyiyal - Uraivalam.* Madurai: Madurai Kamaraj University.

Vellaivaranan, K. (2017). *Thamizh Ilakkiya Varalaaru (Tholkaappiyam).* Chennai: Poompuhar Pathippagam.